அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றேம்.

வீண்செலவு

"ஏ, நம்பிக்கையுடைய மனிதர்களே! அல்லாஹுத்த ஆலாவின் மீதும் கடைசித்தீர்ப்பு நாளின்மீதும் நம்பிக்கை கொள்ளாமல் மனிதர்கள் பார்ப்பதற்காகவே தன்பொருளைச் செலவுசெய்பவனைப்போல், திட்டுவதாலும் துன்பந் தருவதாலும் உங்களுடைய தர்மத்தை மதிப்பில்லாத தாகச் செய்து விடாதீர்கள்"...(அல்குர்ஆன், 2: 264).

மனிதர்களால் புகழப்படும்பொருட்டு வீண்டம்பத்துக்காகத் தான தர்மம் செய்வதை இத்திருவாக்கியம் அதிபலமாகக் கண்டிக்கின்றது; வீண் ஆடம்பரத்துக்காக மட்டும் செய்யும் தானதர்மம் ஒருபோதும் சரியானவையாக மாட்டாவென்று இவ்வேத வாக்கியம் விளக்கிக் காட்டுவது மட்டுமல்லாமல் அப்படிப் படாடோபத்துக்காகச் செய்யும் காரியம் மூமின்களுக்கு யோக்கியமான விஷயமாக ஆகாதென்றும் ஸ்பஷ்டமாய்க் காட்டுகின்றது. ஆதலின் உண்மையான மூமின்கள் இப்படிப்பட்ட வெளிப்பகட்டான வீண் ஸ்தோத்திரத்துக்கு ஆசைப்பட்டுத் தம்முடைய பொருளை வெறுஞ் செலவு செய்யத்துணியார். இன்னும், ஆடம்பரத்துக்காக வல்லாமல் ஆண்டவனுக்காகத் தானதர்மம் செய்பவர்கள் தற்பெருமைக்காகப்

பிறருக்குத் தெரிவிக்காமலும் தானதர்மம் வாங்க வந்த ஏழைகளைத் திட்டாமலும் அவர்களுடைய மனஸுக்கு நோவுண்டு பண்ணுமலும் சாந்தமாகவும் அடக்கமாகவும் நடந்துகொள்ளுவார்கள். இதுதான் தேவகட்டளை. கள்ள மூமின்களல்லாத உள்ளத்தில் நல்லெண்ணமுடைய தெள்ளியமுஸ்லிம்க ளெல்லாரும் இத்திருவாக்கியத்தில் சொல்லப்பட்டிருப்பதேபோல் நடந்துகொள்ளுகிறார்கள்; ஆனல் இஸ்லாமார்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் முறையை முற்றிலும் மறந்து இவ்வுலகில் அநேக முஸ்லிம்கள் கண்ட கண்டபடி தற்பெருமைக்காகத் தாறுமாறாய்த் தம்முடைய பணத்தைச் செலவுசெய்துவிட்டு அதையெல்லாம் ஆண்டவனுக்காகச் செய்ததாக மதித்துக் கொள்ளுகின்றனர். இப்படிப்பட்ட வீண்டம்பச் செலவை யெல்லாம் ஏற்றுக் கொள்வதற்கும் அப்படிச் செலவு செய்பவர்களை ஸ்தோத்திரம் செய்வதற்கும் இவ்வுலகில் கற்றறிந்த வர்களும் மற்றுமுள்ளவர்களும் ஆயிரக்கணக்காய் உலாவித்திரிகின்றனர். இப்படிப்பட்ட மனிதர்களின் தன்மையைப் பற்றியே இங்கு சிறிது எழுதுவோம்.

உலகிலுள்ள முஸ்லிம்களின் திரவியத்தில் பெரும் பாகம் வீண் ஆடம்பரமான செலவிலேயே விரயம் செய்யப்படுகின்றது. இப்படிப்பட்ட வீண்செலவுகளிலெல்லாம் முதன்மையானது நமது நபிகள் நாயகத்தின் வாரிஸுகளென்று தம்மைச் சொல்லிக்கொண்டு உலகில் உலவி வரும் மனிதர்களுக்கு அளவுக்கு மிஞ்சி அனுவசியமாய் நாம் அளிக்கும் பணமுடிப்புத்தான். இவ்வாறு உண்மையைச் சொல்லிவிட்டே னென்று உடனே இம்மிஸ்கீனின் நாக்கை அறுத்து விடவேண்டுமென்று ஆத்திரப்படாதீர்கள். முஸ்லிம் சகோதரர்களே! ஆலிம்களுக்கு அவசியம்

வேண்டிய செலவுக்காகப் பண உதவி செய்வதை யான் ஒருபோதும் தடை செய்யவில்லை; ஆனால் அவர்களுக்காக அனாவசியமான அதிகப்பணம் செலவு செய்வதையே வீண் செலவென்று நாம் மிக உறுத்தலுடன் கண்டிக்கிறோம். இப்படிப்பட்ட வீண்செலவால் முஸ்லிம்களின் திரவியம் எவ்வளவோ நஷ்டமாகிறது. உலகமுழுவதும் நடக்கும் இப்படிப்பட்ட அநியாயத்தைப் பரிசீலனை செய்ய இங்கு இடமின்மையால் நமது தென்னாட்டில் மட்டும் நடக்கும் அநீதச் செலவைப் பற்றிச் சிறிது கவனிப்போம். இஸ்லாமார்க்கக் கல்வியை அரை குறையாகவோ சம்பூரணமாகவோ கற்றுக்கொண்டு தம்மை மௌல்விகளென்று சொல்லிக் கொள்பவரில் மிகச் சிலரோ தம்முடைய சொந்தத்தில் பாடுபட்டுக் காலக்ஷேபம் செய்கின்றனர். இப்படிப்பட்ட மௌல்விகளின் செயல் மிகவும் மெச்சத் தக்கதே. இவ்வாறு கண்ணிய புருஷர்களாய்க் காணப்படும் மிகச் சில ஆலிம்கள் தவிர மிகுதிப் பேர்களெல்லாரும் தம்முடைய ஆயுள் முழுதும் பிறருடைய பொருளின்மீதே சார்ந்தவர்களாய்க் காலங்கழிக்கிறார்கள். இவர்கள் தாமே சுயமாக ஒருபாடும் படாமல் காலமெல்லாம் மற்றவருடைய உதவியையே எதிர்பார்த்தவாறிருக்கின்றனரே, இதற்கென்ன சமாதானம் இருக்கிறதோ தெரியவில்லை! இதற்கேதேனும் வேத வாக்கியத்தில் ஆதாரமுண்டோவென்று கவனிக்கும் பக்ஷத்தில் குர்ஆன் ஷரீபில் ஒன்றும் காணப்படவில்லை. "மூமின்களெல்லாம் ஒருங்கே (வேதக்கல்விகற்க வெளியில்) போகவேண்டுமென்பது அவர்களுக்குப் பொருத்தமாய்க் காணப்படவில்லை; அவ்வாறாயின் சன்மார்க்க விஷயத்திற்காக அறிவு பெறும்வழியில் தம்மை நடத்துவதற்காகவும் பிறகு தம்

முடைய மற்ற மனிதர்களை அவர்கள் ஜாக்கிரதையாயிருக்கும் பொருட்டு எச்சரிக்கை செய்வதற்காகவும் ஏன் அவர்களுடைய ஒவ்வொரு வர்க்கத்திலும் ஒவ்வொரு கூட்டத்தார் வெளியில் செல்லக்கூடாது?" (அல்குர்ஆன், 9:122) என்று ஆண்டவன் சில மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறான். சிலர் தவறாக எண்ணுவதுபோல் அல்லாஹுத்தஆலா நம்மெல்லாரையும் மதரஸாக்களுக்குச் சென்று வேதபாரங்கதர்களாக ஆய்விடச்சொல்லவில்லை. உலகிலுள்ள ஒவ்வொருவரும் மௌல்வியாய் விடுவது ஒருபோதும் முடியாதகாரியமே. அப்படிச்செய்வது முடியுமென்று வாதத்தின் நிமித்தம் ஒத்துக்கொண்டாலும் அப்பொழுது இவ்வுலக காரியம் செவ்வனே நடைபெறுவது முடியாமற்போகும். இவ்வுலகம் செம்மையாய் நடைபெறுவதற்கு நானாவிதத் தொழிலாளரும் வேண்டும். எல்லாரும் மௌல்விகளான வேதபாரங்கதர்களா யிருப்பது இவ்வுலக நன்மைக்கே கேடாயிருக்கும். இக்காரணத்தால் தான் நம்மில் சிலர் மட்டும் மௌல்விகளாய் மற்றவர்களுக்கு மதபோதகம் செய்யவேண்டுமென்று சர்வக்ஞனாகிய ஆண்டவன் கட்டளையிட்டிருக்கிறான். வேதபாரங்கதர்களா யிருப்பவர்கள் மற்றச் சாமானிய மனிதர்களுக்குச் சன்மார்க்க விஷயத்தைக் கற்றுக்கொடுக்கும்படி ஆண்டவன் கூறியிருக்கிறானே யொழிய, "நபிகள் நாயகத்தின் வாரிஸுகளென்று சொல்லிக்கொள்ளும் ஆலிம்களே! உங்கள் ஜீவதிசை முழுவதும் பிறருடைய பொருளுதவியையே ஜீவாதாரமாக வைத்துக்கொண்டு காலங்கழிப்பதற்காக நீங்கள் ஆலிம்களாகுங்கள்," என்று அல்லாஹுத்தஆலா எங்கும் சொல்லவேயில்லை. ஆனால் ஆண்டவன், "ஓ முஹம்மதே (ஸல்)! 'அதற்காக ஒரு சன்மானத்தை

யும் உங்களிடம் நான் கேட்கவில்லை; எல்லா ஜாதியார்களுக்கும் அது (திருக் குர்ஆன்) ஒரு ஞாபகமூட்டியாயிருக்கிறதேயல்லாமல் வேறொன்றுமில்லை,' என்று சொல்வீராக," (அல்குர்ஆன், 6: 91) என்று நமது நபிகள் பெருமானருக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறான். வானுலகிலிருந்த குர்ஆன் ஷரீபை இகலோகத்தில இறக்கித் தந்து இஸ்லாத்தை நிலைநாட்டிய எம்பெருமானார் அவர்களே பிறரிடம் ஒரு சன்மானமும் எதிர்பார்க்கக் கூடாதென்று கட்டளையிருக்கும்போது, அவர்களுடைய வாரிஸுகளென்று தம்மைச்சொல்லிக்கொள்ளும் ஆலிம்கள் எவ்வாறு தமது சாதாரணமான வஅல் (பிரசங்கங்)களுக்குப் பிறருடைய பொருளாதாரத்தை ஒரு முறை இரு முறை எதிர் பாராமல் தம்முடைய காலமுழுதும் எதிர் பார்த்து உயிர் வாழ்வது ஆண்டவனுக்குப் பொருத்தமாகும்? நண்பர்களே! நன்றாக யோசியுங்கள்.

"ஆனால் ஆலிம்கள் ஆண்டவனுக்காகத் தம்முடைய காலத்தையெல்லாம் செலவு செய்து பிறரை நல்வழிப் படுத்தினால் அவர்களுடைய ஜீவனம் தான் எப்படி நடப்பது?" என்று பலர் கேட்கக்கூடும்? வாஸ்தவம்தான். ஆனால் "பயகம்பர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இந்த உலமாக்கள் எல்லாரையுங்காட்டினும் பல் கோடி மடங்கு அதிகமான வேலைகளைப் பிறருடைய சன்மானத்தை எதிர்பாராமல் செய்துவந்தார்களே, அது அவர்களுக்கு எப்படி முடிந்தது?" என்று நாம் கேட்கிறோம். போகட்டும். நபிகள் பெருமானாரைப்போல் கிஞ்சித்தும் பிரதிப் பிரயோசனத்தை எதிர்பாராமல் நம்முடைய மௌல்விகள் இஸ்லாத்துக்காகப் பாடுபடவேண்டாம்; அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்

கும் காலக்ஷேபத்துக்குப் போதுமானதைக் கொடுத்து ரக்ஷிப்போம். இது அவசியம் செய்யத்தக்கதே. இதனு லுண்டாகும் செலவு வீண்செலவாகாது. இவ்வாறில்லா மல் உலகத்தில் வேறு எந்தத் தொழில் செய்தபோதிலும் கஷ்டப்பட்டே பொருள் தேடவேண்டியிருக்கிறதென்று சோம்பேறித்தனத்தால் பயந்து ஆலிம் சாகிபாக ஆய் விடும் பக்ஷத்தில் நகத்திலும் ஜுப்பாவிலும் அழுக்குப் படாமல் வேண்டியமட்டும் திரவியம் சம்பாதிக்கலாமென் னும் பேராசையுடன் வேதக்கல்வி சற்றுப்பயின்றுவிட்டுப் பகலெல்லாம் பள்ளிவாசலில் உறங்குவதும் இரவில் சிறிது பொழுது பிரசங்கம்போன்ற ஏதோவொன்றைச் செய் வதுமாய்க் காலங்கழித்துத் தமக்கு வேண்டியதற்குமேல் அதிகம் சம்பாதிக்க ஆசைப்படும் ஆலிம்களுக்கு அனுவசிய மான பெருந்தொகையுள்ள பணமுடிப்பைக் கொடுப்பது தான் முஸ்லிம்களுடைய வீண் செலவுகளிலெல்லாம் முதன்மைபெற்ற வீண்செலவாயிருக்கிறது. என்னருமைச் சகோதரர்களே! இல்லமைச் சுமந்தவர்களுக்கு இடும் சொர்ணதானத்தை இந்தமிஸ்கீன் கெடுப்பதாகக் கோபங் கொள்ளாதிருப்பீர்களாக. யான் சொல்வதில் ஏதேனும் சிறிது உண்மையுண்டோவென்று சற்று நிதானித்துப் பாருங்கள். ஆலிம்களென்று தம்மைச் சொல்லிக் கொள் பவரில் வெகு சிலரே சொந்தப் பாடுபட்டு ஜீவனம் செய் கின்றனர்; மிகுதிப்பேர்களெல்லாரும் பிறருடைய பொரு ளுதவியையே காலமுழுதும் எதிர் பார்க்கின்றனர்; தாலி புல் இல்மு (ஓதுகிறபிள்ளை) என்னும் மாணுக்க நிலைமையி லிருக்கும்போதே இப்படிப்பட்ட துர்க்குணத்தைக் கற் றுக்கொள்ளுகின்றனர். மதரஸாக்களிலுள்ள இப்போ தைய கல்விமுறைமையைத் திருத்தி அமைத்தாலொழியப்

பிறருடைய பொருளில் ஆசைவைக்கும் அந்தத் துர்க் குணம் மாணாக்கர்களையும் மௌல்விகளையும் விட்டு ஒரு போதும் நீங்காது. இக்கெட்ட குணத்தால் ஆலிம்கள் தங்களுடைய "மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை தானம் தவம் முயற்சி தாளாண்மை" முதலிய எல்லாப் பெருமைகளையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டுப் "பல்லெலாம் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச், சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி, மல்லெலாம் அகல வோட்டி மானமென்பதனைவீட்டி"ச் செல்வவான்களுடைய தலைக்கடைதோறும் சென்று அச் செல்வவான் எவ்வளவு கொடிய ஹராமியா யிருந்தாலும் அவனை இந்திரனென்றும் சந்திரனென்றும் ஸ்தோத்திரம் செய்து அவனைப்போன்ற நல்ல மனிதன் இவ்வுலகத்திலேயே வேறு யாருமில்லையென்று தம்முடைய மனச் சாக்ஷிக்கு நேர்மாறாய்ப் பேசுகின்றனர்.

பொருள் தேடுவதையே தம்முடைய பெருநோக்கமாக வுடைய ஆலிம்கள் அநேகவழியில் ஏழை முஸ்லிம்களை ஏமாற்றித் திரிகின்றனர். சில ஆலிம்கள் மதரஸாக்களுக்கென்றும் மஜ்லிஸ்களுக்கென்றும் பொய்சொல்லி வேண்டிய பணம் பறிக்கின்றனர். இவர்களின் அநீதத்தை எடுத்துரைக்க ஏடுபோதாது; இன்னும் சில ஆலிம்கள் தம்முடைய பீபிக்குப் பவுன்மாலை வேண்டுமென்று அரைப்பவுனால் செய்த மாலை ஒன்று கொஞ்சமாக ரூபா 1000-த்தில் கேட்கிறார்கள்; மற்றும் சிலர் தம்முடைய புத்திரர் புத்திரிகளுக்கு விவாகமென்று சொல்லி அச்செலவுக்காக ரூபா 1000 போதுமென்கின்றனர்; இவர்களில் சிலர் மெய்யான விவாகத்துக்காகப் பொருள் தேடுவதுண்டு; மற்றும் சிலர் பொய்யான

விவாகத்துக்காகப் பொருள் பறிப்பார்கள். இப்படிப் பட்ட பொய்க் கல்யாண மௌல்விகள் போகும் ஊரிலெல்லாம் அவருடைய சொந்த ஊரிலிருந்து கல்யாண அவசரம் என்று கடுமையான கடிதங்கள் ஆலிம்சாகிபுக்கு வந்துகொண்டேயிருக்கும்; இது ஒரு ட்ரிக். இன்னும் சில ஆலிம்கள் ஓர் ஊரில் 10, 15 தினம் தங்கி வஅல் போன்ற கதாப்பிரசங்கம் செய்யும் பக்ஷத்தில் ரூபா 400, 500 சன்மானம் பெறுகின்றனர்; போகுமிடங்களிலெல்லாம் நெய்யும் பாலும் தயிரும் மோரும் கோழியும் குர்மாவும் பலவும் பசவும் மாம்சமும் திகட்டத் திகட்டத் தின்னுகிறார்கள்; இப்படிப்பட்ட ஆலிம்களுக்கு ஒவ்வோரிடத்தில் ரூபா 50 முதல் 100 வரையில் செலவுசெய்து ஒவ்வொருவேளைக்கும் விருந்து செய்வதை யாம் பலமுறையும் கண்டிருக்கிறோம். இவ்வாறெல்லாம் சம்பாதிக்கும் பொருளைச் சிலஆலிம்கள் தம்மூரில் உயர்ந்த வட்டிக்குக் கடனாக விடுகின்றனர்; சிலர் தம்முடைய அநேக வேலி நிலங்களுக்கு ஸர்க்கார் கிஸ்துச் செலுத்துகின்றனர்; சிலர் அவ்வூதியத்தைக்கொண்டு பெருத்த வியாபாரம் செய்கின்றனர்; சிலர் தாமும் தம்மைச்சார்ந்தாரும் வயிறு புடைக்கப் புடைக்க ஷட்ரசத்தோடு உண்டு உல்லாசமா யிருக்கின்றனர். இப்படிப்பட்ட ஆலிம்களுக்கு எவ்வளவு திரவிய மிருந்தபோதிலும் பிறரிடத்தில் கையை நீட்டி வாங்குவதை மட்டும் லஜ்ஜையென்று அவர் எண்ணுவதே கிடையாது. இவர்கள் சில சமயங்களில் இத்தென்னிந்திய நாட்டில் சம்பாதிப்பது போதவில்லையென்று "திரைகடலோடியும் திரவியம்தேடு" வதுண்டு. இங்கிருந்து சிலோன் சிங்கப்பூர் பினாங்கு மலாய் முதலிய அயல் நாடுகளுக்கு முஸ்லிம்கள் சென்று ஆயிரம்பாடு அரும்பாடுபட்டுப் பொ

ருள் சேகரம் செய்யும்போது மேலே சொன்ன ஆலிம்கள் போன்றவர்கள் அங்கெல்லாம் தாராளமாகச் சென்று குனியாமல் நிமிராமல் முகவரியாகப் பணம்தண்டி நாலாறு மாதத்தில் ரூ. 4000, 5000 கொண்டுவந்து விடுகின்றனர். இப்படிப்பட்ட ஆலிம்களுக்கு எல்லாவகை உபசாரமும் செய்தால் உடனே சுவர்க்கம் கைக்கு வந்துவிடுமென்றும் தம்மைப் பற்றி மற்றெல்லாரும் பெருமையாய்ச் சொல்லிக் கொள்ளுவார்களென்றும் மயக்கங்கொண்டு பல முஸ்லிம் நண்பர்கள் அறியாத்தனத்தால் அரும் பாடுபடுகின்றனர். ஆலிம்சாகிப் தம்முடைய ஊருக்கு வருமுன்னே எதிர்சென்று அழைத்து அவருக்குப் பலதினம் மட்டும் பலவாலும் பசவாலும் பல விருந்துகள் வீடுதோறும் செய்வித்து அவரது பத்தினியாருக்காக ஒரு பவுன் மாலையும் ரூ.700-க்கு வாங்கிக்கொடுத்து ஆலிம் சாகிபின் கைச்செலவுக்காக ரூ. 500 நோட்டாகவோ பவுனாகவோ மாற்றிக் கொடுத்து அவரை வண்டியிலேற்றிக் கூடவேபின்தொடர்ந்து ரயில்வே ஸ்டேஷனில் ஆலிம்சாகிபின் நோட்டையும் பவுனையும் உடைக்கக்கூடாதென்று வேறு பணத்துக்கு முதல்கிளாஸ் அல்லது 2-வதுகிளாஸ் வண்டியில் வழிகூட்டி அனுப்பி வருகின்றனர் எமது ஏமாந்துபோன முஸ்லிம் சகோதரர்கள். இதனாலெல்லாம் என்ன புண்ணியம் அல்லது புருஷார்த்தம் என்று ஒருவரும் சிந்திப்பதில்லை; அந்தோ பரிதாபம்! இன்னும் சில ஆலிம்கள் ஆடவரில்லா வீடுகள்சென்று அங்குள்ள பெண்மணிகளிடம் சிநேகம் பாராட்டி அவர்களுக்கு முரீதுகொடுப்பதுபோல் முழுமாடு சுருட்டி வேஷம் போடுகின்றனர். இப்படிப்பட்ட பீர்மார்களுக்கு அவர்களுடைய முரீதீன்களாகிய அம்மணிமார்கள் செய்யும் தொண்டூழியத்தைப்பற்றி எவ்வளவுதூரம் வெளி

யில் சொல்லாமலிருக்கிறேமோ அவ்வளவு தூரம் நன்மை யுண்டென்று இம்மட்டோடு அவர்களுடைய செய்கையை நிறுத்திக்கொள்வோம். வேதக்கல்வி பயின்றவரென்று தம்மை மதித்திருக்கும் மேற்கூறிய ஆலிம்கள் ஒரு புறம் இருக்கட்டும். இவர்களைவிட இன்னொரு வர்க்கத்தாரும் ஏழை முஸ்லிம்களிடத்தில் பணம் பறிக்கின்றனர். சாபு வீட்டுப் பிள்ளைகளென்றும் பீர்வீட்டுப் பிள்ளைகளென் றும்தம்மைச் சொல்லிக்கொள்ளுவதல்லாமல் இவர்களுக்கு வேறு யோக்கியதையொன்றும் இருப்பதில்லை ; கேவலம் சாபுவீட்டிலும் பீர் வீட்டிலும் பிள்ளையாய்ப் பிறந்த அதிருஷ்டத்தைச் சொல்லி இவர்கள் ஏழைகளிடம் பணம் பறிக்கின்றனர். இது என்ன புண்ணியமோ எமக்குப் புலப்பட வில்லை.

இவ்வாறெல்லாம் ஏழைகளிடத்திலும் பணக்காரர்க ளிடத்திலும் பலவகைவழியிலும் ஆலிம்கள் பணம்பறிக்கின் றனரே, இதனால் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் ஏதே னும் பிரயோசனம் உண்டோவென்று யோசிக்குங்கால் ஒருவிதத்திலும் பிரயோசனம் இருப்பதாகக் காணப்பட வில்லை. இதனாலெல்லாம் பணம் கொடுப்பவர்களும் பணம் பறிப்பவர்களும் படாடோபத்துக்காக இப்படி யெல்லாம் செய்வதாய்க் காணப்படுகிறதேயல்லாமல் ஆண்டவன் தன் (2:264) வேதவாக்கில் கட்டளையிட்டதுபோல் அதன் கரு த்தையுணர்ந்து நடப்பதாய்க் காணப்படவில்லை. “எமக்கு இன்னஊரில் இன்னபிரபுவைத்தெரியும், இன்னஊரார் எம் மிடம் அதிகபக்ஷம் பாராட்டுகிறார்,” என்று ஆலிம்கள் தற் பெருமை கொள்ளவும், “நாங்கள் ஆலிம்களுக்கு அடிபணி ந்து நடப்போம்; எங்களிடத்தில் இன்ன இன்ன ஊர் இன்ன இன்ன மௌல்விகளுக்கு அதிகப் பிரியமுண்டு;

எங்களைப்போல் வேறு யாரும் ஆலிம்களுக்கு உபசாரம் செய்ய மாட்டார்கள்," என்று தனிகர்களும் அல்லாரும் எல்லாரும் வீண்பெருமை யடைவதற்குமே மேற்கூறிய செய்கைகளெல்லாம் இடந்தருகின்றன; இவ்வாறு கொடுப்பவர்களும் கொள்பவர்களும் தற்பெருமைக்காக விண்டம்பம் செய்கின்றனரே யொழிய வேறு பிரயோசனம் ஒன்றுமில்லை. ஆலிம்கள் பல ஊர்களிலும் சுற்றித்திரிவதால் இஸ்லாத்துக்கு ஏதேனும் பிரயோசனம் உண்டோவென்று யோசிக்குங்கால் அவர்கள் காற்று வாட்டத்தில் வாயால் செய்யும் சூதாப் பிரசங்கங்களெல்லாம் காற்றோடு காற்றாய்ப் போய்விடுகிறதல்லாமல் காரியத்தில் ஒன்றும் பயனில்லை. இத்தமிழ்த் தேசமாகிய தென்னாட்டில் இஸ்லாம் பரவி அநேக நூற்றாண்டுகளாகியும் இன்றுவரையில் குர்ஆன் ஷரீபு* ஹதீது ஷரீபு முதலிய மார்க்கக் கிரந்தங்களெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கப் படாததன் காரணமென்ன? வட இந்தியாவில் உருதுபாஷையில் இஸ்லாமார்க்க சம்பந்தமான எல்லா நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டுப் பலவருஷங்களாய் விட்டன. இத்தே

---

*"இஸ்லாமிய வேதமாகிய இந்நூல் அரபி பாஷையில் இருப்பதால் அதன் முழுக்கருத்தையும் முஸல்மான்கள் பலரும் அறிவது அசாத்தியமா யிருப்பதால் அதை இனிய தமிழ் நடையில் விஷய விளக்கக் குறிப்புரையுடன் மொழிபெயர்த்து வெளியிடுகிறோம்" என்று சென்னையில் சிந்தாதிரிப் பேட்டையிலுள்ள ஸ்ரீ வள்ளிநாயகம் கம்பெனியார் ஒரு விளம்பரம் செய்திருக்கின்றார்கள். முஸ்லிம் வேதபாரங்கதரென்று தம்மைச் சொல்லிக்கொள்பவர்கள் வெகுபேர்களிருக்க ஒரு ஹிந்துக் கம்பெனியார் நமது திருவேதத்தைத் தமிழில் வெளியிட முன் வந்தது நமக்கு அதிக விசனத்தையே தருகின்றது; இது நமக்கு மகா வெட்கக் கேடானதே.

னாட்டிலுள்ள மௌல்விகளும் அல்லாஹ்வுக்காகப் பாடு பட்டு இஸ்லாத்துக்கு உழைப்ப தென்பது உண்மையா யின் ஏன் மேற்கூறிய கிரந்தங்களெல்லாம் இன்றளவும் தமிழில் மொழிபெயர்க்கப் படவில்லை? இதுபோகட்டும். இஸ்லாமார்க்க சம்பந்தமான ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத் திரிகையேனும் உண்டோவென்றால் அதுவும் பூச்சியமாக வே இருக்கிறது. இதற்குக் காரணமென்ன? இஸ்லாமார்க் கக் கிரந்தங்களை யெல்லாம் தமிழில் வெளிப்படுத்தினால் எல்லோருடைய கண்களும் திறந்து விடுமென்றும் அப்படி வெளிப்படுத்தாதவரையில் தாங்கள் ஏழை முஸ்லிம்களைக் கடிவாளம்போட்டு அடக்கி ஆளலாமென்றும் ஆலிம்கள் கபட எண்ணத்துடன் சும்மா இருக்கிறார்கள் போலும்; இல்லை, அவர்கள் கபட எண்ணத்தால் சும்மா இல்லையென் போமாயின் இஸ்லாமார்க்கநூல்களை இனியதமிழில்மொழி பெயர்க்க அவர்களுக்குச் சக்தியில்லையென்றேசொல்லவே ண்டும். இவ்விரண்டுமல்லாமல் வேறு காரணம் இருப்ப தாய் விளங்கவில்லை. இன்றேல் இஸ்லாமார்க்க நூல்களை இனிய தமிழில் வெளியிட்டால் இதர மதங்களுக் கெதி ரில் நம்முடைய சத்திய சன்மார்க்கம் இழிவடைந்து போகு மென்று அச்சப்படுகின்றனரா?

இதுவரையில் நாம் மேலே சொல்லிவந்த பலவழிக ளாலும் ஆலிம்கள் பொருள் தேடுகின்றனர். அவர்களில் அநேகர் நம்மில் பலரைக்காட்டிலும் பெருத்த தனிகர்க ளாயிருக்கின்றனர். இப்படியிருந்தும் மேன்மேலும் பணம் பறிக்கும் தொழிலை ஒரு போதும் அவர்கள் கைவிடுவ தில்லை. இஸ்லாமிய மூலக் கிரந்தங்களைச் செந்தமிழில் மொழிபெயர்த்துச் சாமானியர்களுடைய கண்ணைத் திற ந்து விடவும் அவர்கள் வழி தேடுவதில்லை; அல்லது இஷா

அத்தே இஸ்லாம் என்னும் சன்மார்க்கப் பிரசாரத்துக்காகவும் அவர்கள் ஒரு பைசாவும் செலவிடுவதில்லை. எல்லாம். தங்களுடைய சொந்தத்துக்காகவே சேமித்து வைத்துக் கொள்ளுகின்றனர். உண்மை இவ்வாறு இருக்கும்போது இப்படிப்பட்ட ஆலிம்களின் நிமித்தம் நம்முடைய அரிய திரவியத்தை யெல்லாம் அள்ளிக்கொடுப்பதால் யாருக்கு என்ன பிரயோசனமென்று நண்பர்களே நன்கு நோக்குங்கள். இஃதெல்லாம் வீண் செலவல்லவா? நமக்கும் பிரயோசனமில்லாமல் அவர்களுக்கும் சோம்பலை விருத்தி செய்யத்தக்க இச்செலவு ஆண்டவனுடைய 2:264-வது 6:91-வது ஆயத்துக்களில் சொல்லப்பட்டகட்டளைக்கு எவ்வளவு தூரம் பொருத்தமா யிருக்கிறதென்று அறிஞர்களாகிய நீங்கள் ஆழ்ந்து யோசனை செய்து பாருங்கள்.

இதுவரையில் ஆலிம்களின் நிமித்தம் நாம் செய்யும் வீண் பணச்செலவின் விவரத்தைச் சிறிது சொன்னோம்; இனி அவர்களால் ஆதரிக்கப்பட்டுவரும் வேறொரு வீண் செலவையும் கவனிப்போம். நம்முடைய பயகம்பர் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திருவவதார வைபவத்தை ரபிய்யுல்அவ்வல்மாதத்திலும் வேறு மாதங்களிலும் கொண்டாடுவது மெத்த ஏற்றமான காரியம்தான். அப்படிப்பட்ட காலங்களில் மௌலிது ஷரீபு ஓதி, கந்தூரி விருந்துசெய்வதும் அதிக நன்மையான காரியங்களே. நம்முடைய திருநபியவர்கள் மீது பயபக்தி விசுவாசம்வைத்து அவர்களுடைய பிறந்த தினவைபவத்தைக் கொண்டாடி ஏழைகளுக்கும்அன்னமளித்து மற்றவர்களுக்கும் விருந்துசெய்து சந்தோஷமாயிருப்பது அதிக சந்தோஷமான காரியமே. ஆனால் இத்தென்னாட்டில் மௌலிதுஷரீபு ஓதி, கந்தூரி செய்பவர்

களில் பெரும்பான்மையோர் தற்பெருமையி னிமித்தம் செய்வதாகவே ஏற்படுகிறது. அதைத்தான் இங்கே கண்டிக்கிறோம்; இவர்கள் செய்யும் காரியம் புண்ணியமில்லாமல் போவதோடு வீண்காரியமாகவும் பாபத்துக்கு இடமுள்ளதாகவும் மாறி விடுகின்றது. "அ(த்)தீ ஊல்லாஹ, வஅ(த்)தீ உர்ரஸூல" (24:54) என்னும் வேத வாக்கியத்துக்கு இணங்கி ஆண்டவனும் அவனது ரஸூலும் சொன்னதுபோல் ஒரு கடமையும் சில தனிகர்கள் செய்வதில்லை; அவர்கள் இருவரும் செய்த உத்தரவில் முழுப் பராமுகமாயிருந்து ஈமான் இன்னதென்றும் இஸ்லாம் இன்னதென்றும் அறிந்துகொள்ளாமலும் அவற்றின் ஷரத்துப்படி ஒருசிறிதும் நடந்துகொள்ளாமலும் சன்மார்க்க விஷயத்தில் வெகு அலக்ஷியமாயிருப்பவர்கள் பல தனிகர்கள் வருஷமொரு முறையேனும் தவறாமல் மௌலிதுஷரீபு ஓதி, கந்தூரி செய்வதில் கிஞ்சித்தும் தவறாமல் நடந்துகொள்ளுகின்றனர். அல்லாஹுத் தஆலா சொல்வதையும் அவனுடைய ரஸூல் சொல்வதையும் புறக்கணிப்பவர்கள் வருஷமொரு முறை மௌலிதுஷரீபுமட்டும் செய்துவிட்டால் அது மகாசிலாக்கியமான புருஷார்த்தமென்று யார்தான் சொல்லத் துணிவார்? இப்படிப்பட்டவர்கள் வெறும் புகழுக்காக வீண்செலவு செய்கின்றனரே யொழிய வேறொன்றுமில்லை. "இன்ன ஊரில் இன்னார் வீட்டில் இவ்வளவுசெலவுசெய்து இன்னவிதமாய் மௌலிதுஷரீபும் கந்தூரியும் செய்தார்கள்; அதற்கு இன்ன இன்ன ஊரிலிருந்து இன்ன இன்ன பிரமுகர்களும் இன்ன இன்ன மௌல்விகளும் வந்திருந்தார்கள்," என்று உலகோர் புகழ்வதற்கே அநேகர் தம் பணத்தை வீண் விரயம் செய்கின்றனர். இவர்களுக்குத் தினையவ்வளவு உண்மையான பக்தி யிரு

ந்தபோதிலும் இப்படிப்பட்ட வீண் டம்பமான வெறுங் காரியத்தைச் செய்யமாட்டார்கள். இத்தகைய் வீண் புகழுக்கு ஆசிப்பவர்களுக்குத் தக்க புத்திமதியைக்கூறி அவர்களைச் சன்மார்க்கத்தில் திருப்பாமல் அவர்கள் செய்யுங் காரியங்களுக்கு "ஒத்துக்கு மத்தளம் தட்டுவதே போல்" ஆலிம்களே அவற்றையெல்லாம் அங்கீகரித்துக் கொண்டு தங்களுடைய சன்மானத்துக்கு முந்துகின்றனர். "இன்ன இன்ன ஊரில் இன்னஇன்ன பிரமுகர்கள் எம்மை விட்டுவிட்டு மௌலிது ஷரீபும் கந்தூரியும் செய்யமாட்டார்கள்; நாம் போயிருந்து தான் அவருடைய காரியத்தைப் பூர்த்திசெய்து வைப்போம்," என்று பல ஆலிம்கள் பெருமை பேசுகின்றனர். இதையெல்லாம் நோக்கும் போது இப்படிப்பட்ட மௌலிதுக்கும் கந்தூரிக்கும் செலவு செய்வதை யார் தான் வீண் செலவென்று சொல்லத்துணியார்? இப்படிப்பட்ட வீண் செலவில் வருஷம் ஒன்றுக்குத் தென்னாட்டில் மட்டும் வியமாகும் தொகையைக் கணக்கிடும் பக்ஷத்தில் அது எத்தனையோ லக்ஷமாகும். இவ்வளவு திரவியத்தையும் இஸ்லாத்தின் பிரசாரத்துக்காகவும் முஸ்லிம்களின் மேன்மைக்காகவும் செலவு செய்தால் எவ்வளவோ பிரயோசனமும் புண்ணியமும் புருஷார்த்தமும் உண்டாகும். உண்மையான பக்தியுடையவர்கள் இஸ்லாத்துக்காகவும் முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்காகவும் செலவு செய்வார்கள்; அஃதில்லாதவர் தான் திருநபியின் மௌலிது ஷரீபு செய்வதாய் வியாஜம் வைத்துக்கொண்டு வீண் புகழுக்காகப் பாடுபடுகின்றனர். இவர்களும் இதன் தலைப்பில் கண்ட 2:264-வது ஆயத்தின் தாத்பரியத்தை உய்த்துணர்வார்களாக.

இன்னும் வேதக்கட்டளையில்லாத வெகு காரியங்

களில் நம்முடைய முஸ்லிம் சகோதரர்கள் அசம்பாவித மான அநாசாரங்களுடன் வீண்செலவு வெகுவாய்ச் செய் கின்றனர். உதாரணமாக, விவாகம் ஸுன்னத்தென்னும் விருத்தசேதனம் பிஸ்மில்லாகானியென்னும் வேதக்கல்வி ஆரம்பம் குழந்தை பிறந்த நாற்பதாம் நாள் சடங்கு குழந் தைக்குப் பேர்வைக்கும் வைபவம் வேண்டுதல் (மானத்து) களை நிறைவேற்றுதல் சர்க்காரில் பட்டம் பெறுதற்காகப் பாடுபடுதல் முதலிய காரியங்களில் எவ்வளவோ கணக்கில் லாத திரவியம் செலவழிகின்றது. மேலே சொல்லப்பட்ட காரியங்களையெல்லாம் அதிக டாம்பிகமாகச் செய்யவே ண்டுமென்று எந்த வேதவாக்கிலும் கட்டளையிட்டில்லை. எல்லாம் நம்முடைய வெறும் புகழுக்காகவே வீண் செலவு செய்து அதிக ஆடம்பரம் செய்கிறோம். இப்படி நாம் வீண்செலவு செய்யும் தொகையில் ஏக தேசத்தையேனும் முஸ்லிம்களின் கல்விவிஷயமாய்ச் செலவுசெய்வோமாயின் நமது குலத்தாரின் கல்விப்பெருமை எவ்வளவோ முன் னுக்குவரும். கல்வியில் நம்முஸ்லிம்கள் இப்பொழுது மிகத்தாழ்ந்து கிடக்கிறோமென்பது உலகமறியக் கிடக் கும் உண்மையாகும். நம்முடைய முஸ்லிம் குழந்தைகளின் கல்விப் பயிற்சியை முன்னுக்குக் கொண்டுவருவதில் திர விய சகாயம் செய்வதை விடுத்துக் கல்யாணம், ஸுன்ன த்து, காது குத்தல், பிஸ்மில்லாகானி, பேர்வைத்தல், மானத்துச் செய்தல் முதலிய பல்லாயிரம் வீண் காரியங் களில் வேண்டியமட்டும் பணத்தைச் செலவிடுகிறோம். இஃதெல்லாம் தற்சமய வீண் புகழுக்காகவே செய்யப்படு கிற தல்லாமல் வேறொன்றுக்குமல்ல. இப்படியெல்லாம் வீண்செலவு செய்யும் தொகையை ஸத்விஷயத்தில் செலவு செய்தால் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எவ்வள

வோ பெருமையும் மேன்மையும் உண்டாகும். பெருந் தனிகர்களில் பலர் ராஜாங்கத்தில் பட்டம் பெறுதற்காக எவ்வளவோ திரவியத்தை வீண்செலவு செய்கின்றனர். இவர்கள் செய்யுங் காரியங்களெல்லாம் வெளியிட்டுச் சொல்லுந் தரமல்ல.

இதுவரையில் நாம் மேலே சொன்ன காரியங்களெல்லாம் வேதக் கட்டளையில்லாவிட்டாலும் மனிதர்களின் வீண் பெருமையை மட்டும் காட்டுகின்றனவல்லாமல் இஸ்லா மார்க்கக் கொள்கையை ஒன்றும் இடிக்கவில்லை. ஆனால் முஸ்லிம்கள் இன்னும் சில அடாத செயல்களையெல்லாம் செய்து இஸ்லாத்தின் கொள்கையையும் தாக்குவதற்கு யோக்கியமான காரியங்களைச் செய்கின்றனர். இஸ்லாத்துக்கும் விக்கிரக ஆராதனைக்கும் வெகு தூரமுண்டு. இவ்வுலகில் விக்கிரக ஆராதனையை அடியோடு ஒழிக்கப் பார்ப்பது இஸ்லாம் ஒன்றுதான். இப்பேர்ப்பட்ட இஸ்லாமிய சத்திய சமாஜத்தில் சேர்ந்த முஸ்லிம்களில் பலர் முஹர்ரம் மாதத்தில் தாபூத்தென்னும் பஞ்சாக் கூண்டு எடுப்பதிலும் பெரியோர்கள் அடக்கமாயிருக்கும் தர்காக்களில் சந்தல் என்னும் சந்தனக்கூண்டு எடுப்பதிலும் அதி தீவிரமாயிருக்கின்றனர். விக்கிரக ஆராதனைக்கு முதற் படியான தாபூத்தும் சந்தலும் அறியாத முஸ்லிம்கள் எடுத்து ஊர்கோலம் (ஊர்வலமன்று) செய்யும்போது அறிவிற்சிறந்த ஆலிம்களும் அப்படிப்பட்ட விக்கிரக ஆராதனையான கொடுஞ்செயலைக் கண்டிக்காமல் அதை ஆமோதித்தவர் போல் சும்மா இருப்பதல்லாமல் அதிலும் சன்மானத்துக்கு இடுக்குண்டோ என்று சிலர் நோட்ட மிடுகின்றனர். நாகூர் முத்துப்பேட்டை முதலிய இடங்களில் எத்தனைபேர் வேதக்கல்வி பயின்றவர்கள் மயிலிறகு வைத்துக்

கொண்டு சர்க்கரை பாத்திஹா ஓதுவதற்கும் சாகிபு சாகி பாக்களின் மூஞ்சியில் அதைத் தடவுவதற்கும் ஆயத்தமாகக்காணப்படுகின்றனர்! இன்னும் எத்தனை சாபுமார்கள் பஞ்சாவுக்கு பைத்து ஓதுகின்றனர்!! இப்படிப்பட்ட விக்கிரக ஆராதனையான கொடுந்தொழில் புரியும் அறியாத முஸ்லிம்களை நல்வழிப்படுத்தாம லிருப்பது உலமாக்களுடைய பெருந்தவறென்றே நாம் பன்முறையும் அழுத்தமாய்ச் சொல்கிறோம். இப்படிப்பட்ட தாபூத்தாலும் சந்தல் உத்சவத்தாலும் முஸ்லிம்களின் திரவியம் எவ்வளவு வீண்செலவாகின்றதென்று நீங்கள் சற்றும் யோசிக்க மாட்டீர்களா? இஸ்லா மார்க்கத்தின் மூலக் கொள்கைக்கு நேர்மாறான விக்கிரக ஆராதனையையெல்லாம் கண்டிக்காமல் இருக்கும் உலமாக்கள் தம்மை நபிகள் நாயகத்தின் வாரிஸாக ளென்று வீண்பெருமை பாராட்டுவதால் யாதுபயன்? சில ஊர்களில் ஓதிக்கொடுக்கும் மதரஸாக்களிலும் தொழுது கொள்ளும் பள்ளிவாசல்களிலும் பஞ்சாவும் சந்தனக்கூடும் வைத்து அவ் விக்கிரக ஆராதனையைக் கொண்டாடுகின்றனர். இப்படிப்பட்ட அட்டூழியங்களை யெல்லாம் கற்றறிந்த மௌல்விகள் கண்ணாரக்கண்டும் பாராமுகமா யிருப்பதற்கு ஆண்டவனிடம் அவர்கள் பின்னொரு சமயம் அவசியம் சமாதானம் சொல்லியே தீர வேண்டுமென்று நாம் நிச்சயமாய் நம்புகிறோம். இப்படிப்பட்ட வீணனகாரியங்களில் செலவாகும் பணத்தை வேறு நல்வழியில் செலவுசெய்தால் எத்தனை பிரயோசனமுண்டாதல் கூடும்? நேசர்களே! யோசனை செய்யுங்கள்.

முஸ்லிம் நண்பர்களே! வீணனகாரியங்களிலும் ஆடம்பரமான செய்கைகளிலும் நமது அருமையான ஐசுவரியத்தைச்செலவு செய்வதால்புண்ணியமாவது புருஷார்த்த

மாவதுண்டா? இஸ்லாம் இப்போது மிக்க நெருக்கடியான நிலைமைக்கு வந்துவிட்டது. இஸ்லாத்தை மேன்மைப்படுத்தி முஸ்லிம்களையும் முன்னுக்குக்கொண்டு வரவேண்டியது உங்களில்ஒவ்வொருவருக்கும் முக்கியக்கடமைகளில் முதற் கடமையா யிருக்கின்றது. ஆதலின் முஸ்லிம் நண்பர்களே! நீங்கள் உங்களுடைய சொந்த அவசியத்தின் நிமித்தம் செய்யவேண்டிய செலவுபோக மிகுதியை இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காகச் செலவு செய்வீர்களாக. இது வரையில் மேலே சொல்லி வந்த வீண் செலவுகள் சம்பந்தமாய்ப் பண விரயம் செய்யவேண்டிய சமயம் நேரும்போது நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு பைசாவும் எவ்வளவு தூரம் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் நன்மை பயக்குமென்று நிதானிப்பீர்களேல் முஸ்லிம் உலகம் இன்னும் முன்நேரமாதத்தில் முன்னுக்கு வந்துவிடும். கோடிக்கோடியாய் முஸ்லிம்கள் வீண்செலவு செய்வதை நல்வழியில் செலவு செய்தால் எவ்வளவோ நன்மை யுண்டாகும்.

"நீங்கள் வெளிப்படையாகப் பிச்சை யிடுவீர்களேல் அது நல்லதுதான்; இன்னும் அதை நீங்கள் மறைவாகச் செய்து ஏழைகளுக்குக் கொடுப்பீர்களேல் அது உங்களுக்கு அதிக நன்மையாகும்" (அல்குர் ஆன், 2:271) இந்த ஆயத்தில் வெளிப்படையாகச் செய்யச்சொன்ன ஈகையானது 2:264-ல் "மனிதர்கள் பார்ப்பதற்காக"ச் செய்யக் கூடாதென்ற வெளிப்பகட்டுத் தர்மத்துக்கு முரணாகாது. 2:264-ல் பிறர் பார்த்து மெச்சிக்கொள்வதற்காகத்தான் தர்மம் செய்யக்கூடாதென்று கட்டளை பிறந்திருக்கிறது. ஆனால் இந்த 2:271-ல் சொல்லப்படும் வெளிப்படையான ஈகையென்பது இஸ்லாத்தின் பொது நன்மைக்காகப் பகிரங்கமாகக் கொடுப்பதைத் தெரிவிக்கிறது. தனியே ஏழை

களுக்கு ஈவதையும் பகிரங்கமாய் இஸ்லாத்தின் நன்மைக் காகச் சகாயம் செய்வதையும் இந்த ஆயத்து விளக்குகின் றது. இஸ்லாத்துக்கு இப்போது மிக்க இடுக்கான காலம் சம்பவித்திருப்பதால் அதன் முன்னேற்றத்துக்காக உங்க ளாலியன்றதை உதவுங்கள், உதவுங்கள், உதவுங்கள்.

யதார்த்தவாதி வெகுஜன விரோதிதான். ஆயினும் இதன் மற்ற விவரங்கள் பின்னொருமுறை இன்னும் ஸ்பஷ் டமாக எழுதப்படும்.

கமலம் 2 1—10—20 இதழ் 9, 10

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்.

மனிதருக்கேற்ற மாதிரி.
(AN EXCELLENT EXEMPLAR & A PERFECT MODEL)

"அல்லாஹுத் தஆலாவின் ரஸூலிடத்தில் நிச்சய மாக உங்களுக்கு ஒரு நேர்த்தியானமாதிரி இருக்கிறது" (அல்குர்ஆன்,33·21).

மானிட வர்க்கத்தார் இவ்வுலகில் மேன்மைபெற வேண்டுமாயின் அவர்களுக்கு ஒருவர் மாதிரி (நமூனா) காட் டவேண்டும். அப்படியாயின் இவ்வுலகத்தவருக்கேற்ற சரி யானமாதிரியென்றுயாரைநாம்சொல்வது? உலகத்திலுள்ள ஒவ்வொரு மதத்தினரும் தம் தம்முடைய மதத் தலைவரே